# காலங்கள் கடந்து போனாலும்




நம் வாழ்நாட்கள் வேகமாய் கடந்து போய் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். நாட்களும், வருடங்களும் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் 2000ஆம் ஆண்டு பிறப்பதையும், ஆண்டவர் வருகையையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நாட்கள் உண்டு. ஆனால் 2000ஆம் ஆண்டு பிறந்தே இப்பொழுது 17 வருடங்கள் ஓடி விட்டது. நம் வாழ்க்கை சூழலிலும் பல்வேறு மாற்றங்கள் நம்மை அறியாமலேயே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இவற்றில் சில நன்மைக்குரிய, மகிழ்ச்சிக்குரிய மாற்றங்கள் ஆகும். உதாரணமாக, சில வருடங்களுக்கு முன்பு வரை நம் படிப்பு, வேலை என்று இவற்றை சிந்தித்த நாம், இன்று நம் பிள்ளைகளின் படிப்பு, வாழ்வை குறித்து சிந்தித்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் கடந்த காலத்தில் வாழ்வில் உண்டான சில காரியங்கள் / மாற்றங்கள் நம்மை நிலைகுலைய செய்துள்ளன. உதாரணமாக, வியாதி படுக்கை, ஊழிய பாதையிலும், வாழ்க்கையிலும் எந்தவித பலனும் / முன்னேற்றமும் இல்லாமல் கடந்து சென்ற காலங்கள், இன்னும் சில இழப்புகளை சந்தித்த

நேரங்கள் நம்மை இன்றும் வேதனை அடைய செய்து கொண்டிருக்கின்றன.

ஒருபுறம் ஆண்டவர் நம் வாழ்க்கையில் வைத்திருக்கும் நோக்கத்தை நோக்கி உற்சாகமாய் நாம் ஓடிக்கொண்டிருந்தாலும், மறுபுறம் காலங்கள் கடந்தும் திராத வியாதிகள், பிரச்சனைகள் நம்மை சோர்வுள்ளாக்குகிறது. என்றுதான் இந்த பிரச்சனைக்கு முடிவு வரும், நாம் காலம் முழுவதும் இப்பிரச்சனையோடு தான் வாழவேண்டுமா என்று அநேக நேரங்களில் நாம் நம்மில் தவிக்கிறோம். வேதாகமத்தில் ஆண்டவர் ஆபிரகாமை அழைத்தது முதல் ஈசாக்கின் பிறப்பு வரையிலும், யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டது முதல் எகிப்தில் உயர்த்தப்பட்டது வரையிலும், மோசே எகிப்தை விட்டு ஓடி சென்று மீண்டும் ஆண்டவர் அவரை அழைக்கும் வரைக்கும் ஆகிய இந்த இடைப்பட்ட காலத்தில் இந்த தேவ மனிதர்களும் சரீர பிரகாரமாகவும், மனதிலும் பல்வேறு இன்னல்களை அநுபவித்தனர். ஆண்டவர் வாக்குத்தத்தம் கொடுத்தும், காலங்கள் கடந்து போனதால், காத்திருக்க மனமில்லாத சாராளினிமித்தம் ஆபிரகாமுக்கு தேவையில்லாத சஞ்சலங்கள் ஏற்பட்டது. இது போல நம் வாழ்விலும் வியாதிபடுக்கை, பிரச்சனைகள் ஆகியவை காலங்கள் கடந்தும் மாறாமல் இருக்கும்பொழுது, மன அழுத்ததாலும், மற்ற மனிதர்கள், சூழ்நிலைகள் கொடுக்கும் அழுத்ததாலும் நாம் சோர்ந்து போகிறோம்.

ஆகிலும் தேவன் இறுதியில் அவரவர்களுக்கு வேண்டிய காரியங்களை தமக்கு சித்தமான நேரத்தில் வாய்க்கசெய்தார். வேதனைகளை கடந்து வந்தாலும் முடிவு மகிமையாகவே இருந்தது. இங்கு நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஒரு சத்தியம் என்னவெனில், 24 மணிநேர நாட்கள், மற்றும் 365 நாட்கள் கொண்ட வருடங்கள் ஆகிய இக்காலத்தின் அளவிற்குள்ளாய் நாம்தான் இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் தேவனோ காலத்திற்கு அப்பாற்ப்பட்டவர். **“ பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம்” (2 பேதுரு 3:8).** எனவே காலத்திற்கு / நேரத்திற்கு உட்பட்டு வாழ்கிற நாம்தான் காலங்களும் / நேரங்களும் கடந்து செல்லுகையில் குறிப்பிட்ட காரியத்தில் / பிரச்சனையில் மாற்றம் இல்லையே என்று எண்ணி தவித்து போகிறோம். ஆனால் ஆண்டவர் முக்காலத்தையும் அறிந்தவர், முக்காலங்களிலும் ஒரே நேரத்தில் செயல்பட கூடியவர். அவர் எக்கால சூழ்நிலையையும், எக்காலத்திற்கும் ஏற்றவாறு மாற்றி அமைக்க கூடியவர். உதாரணமாக, இரண்டு வருடத்திற்கு முன்பாக யோசேப்பு பானபாத்திரக்காரரின் தலைவனுக்கு

செய்த நன்மையை அவனுக்கு தக்க நேரத்தில் ஞாபகப்படுத்தி **(ஆதி 41:9)**, அதின்மூலம் ஆண்டவர் யோசேப்பின் வாழ்க்கையில் கிரியை செய்தார்.

அதேபோல் எதிர்காலத்தில் நாம் வாழ்வில் சந்திக்க இருக்கும் சூழ்நிலைகளுக்காகவும், ஆண்டவர் இப்பொழுதே நம் வாழ்வில் சில பயிற்சிகளை நாம் அறியாமலேயே நமக்கு கொடுக்கிறார். உதாரணமாக மோசே தன்னுடைய இறுதி 40 வருட காலத்தில் செய்ய வேண்டிய ஊழியத்திற்காக அவருடைய முதல் 40 வருட காலத்தை தேவன் பயன்படுத்தினார். எனவே காலங்கள் கடந்து போனாலும், இல்லையேல் காலமே முடிந்துபோய்விட்டது இனி எதுவும் செய்ய இயலாது என்ற நிலை வந்தாலும், அங்கும் தேவன் கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார். 12 வருட உதிரபோக்கினால் பாடுப்பட்டாலும் **(மாற் 5:25)**, 18 வருட கூனியாய் இருந்தாலும் **(லூக் 13:11)**, 38 வருடமாய் பெதஸ்தா குளத்தண்டையில் வியாதிப்பட்டிருந்தாலும் **(யோ 5:5)**, பிறவியிலேயே பார்வையற்றவராய் இருந்தாலும் **(யோ 9:1)**, மரித்து அடக்கமபண்ணப்பட்டு நாளுநாளானாலும் **(யோ 11:39)**, ஆண்டவருக்கு கிரியை செய்வதில் எந்தவித வித்தியாசமும் இல்லை. ஆண்டவராகிய இயேசு இருந்திருந்தால் லாசரு மரியாமல் இருந்திருப்பானே என்று அவனுடைய சகோதரிகளும், மற்றவர்களும் சொன்னாலும் **(யோ 11:21,32,37)**, ஆண்டவரோ எக்காலத்திலும், எவ்விடத்தில் இருந்தும் ஒரே நேரத்தில் கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார்..

நம் விண்ணப்பங்கள் / வேண்டுதல்களை கேட்டு நம்மோடு இடைபடும் அதே நேரத்தில், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள ஒருவரோடும் அதே நேரத்தில் அவரால் இடைபட முடியும். இது நம்முடைய புரிந்து கொள்ளும் திறனிற்கு அப்பாற்ப்பட்ட அவருடைய தெய்வீக சுபாவமாகும். நம்முடைய சிந்தனை, செயல் யாவும், ஒரு அளவிற்குட்பட்டது. ஆனால் ஆண்டவரோ அவற்றிற்க்கு அப்பாற்பட்டு கிரியை செய்கிறவராய் இருக்கிறார். எனவே காலங்கள் கடந்து போனாலும், காலத்தை கடந்த ஆண்டவரையே நம்பி நாம் வாழ்வோமானால் நிச்சயமாக முடிவு உண்டு, நம் நம்பிக்கை வீண் போகாது **(நீதி 23:18)**. ஆமென், அல்லேலூயா.